தினமணி

**வயலுக்குப் பாய்ச்சும் நீரிலிருந்து மின்சாரம்**

First Published : 07 May 2011 09:31:24 AM IST

சென்னை, மே 6: விவசாயத்துக்குப் பாய்ச்சும் நீரின் வேகத்தின் உதவியுடன் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் புதிய கருவியை மதுரையைச் சேர்ந்தவர் கண்டுபிடித்துள்ளார்.

இந்தக் கருவியின் உதவியுடன் ஒரு விவசாயி, ஒரு மணி நேரத்துக்கு 0.5 கிலோ வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்கிறார் கண்டுபிடிப்பாளர் நீதிச்சாமி.

பி.எஸ்சி. பயன்பாட்டு அறிவியல் பட்டதாரியான இவருக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். வீட்டில் குழாயிலிருந்து பக்கெட்டில் நீர் விழும்போது, பக்கெட்டினுள் இருந்த குவளை சுழன்றதைக் கவனித்தபோது இந்த யோசனை தோன்றியது. நீர் மின் உற்பத்தி திட்டத்தைப் போன்று, பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் குழாய்களுக்கு ஏற்ற வகையில் சிறிய கருவி கண்டுபிடிக்க வேண்டும் என்ற நீண்ட நாள் எண்ணமே, இப்போது நனவாகியிருக்கிறது என்கிறார் நீதிச்சாமி.

இதுகுறித்து மேலும் அவர் கூறியது:

தமிழகம் முழுவதும் 20 லட்சம் விவசாய நீர் பாய்ச்சும் பம்புகள் பயன்பாட்டில் உள்ளன. இந்த குழாய்களிலிருந்து அதிக அழுத்தத்தில் தண்ணீர் வெளியாகும் இடத்தில் இந்தக் கருவியை பொருத்திவிட்டால் போதும், மின்சாரத்தை உற்பத்தி செய்துவிடலாம்.

ஒவ்வொரு குழாயிலிருந்தும் ஒரு மணி நேரத்துக்கு 0.5 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். தமிழகம் முழுவதிலும் உள்ள விவசாய நீர் பாய்ச்சும் குழாய்கள் மூலம், நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் நீர் பாய்ச்சும் பட்சத்தில் 5004 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

லாரிகளில் நீர் நிரப்பும் குடிநீர் தொட்டி குழாய்களிலும் இந்தக் கருவியை பொருத்தி மின் உற்பத்தி செய்ய முடியும். தமிழகம் முழுவதும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடிநீர் தொட்டிகள் உள்ளன.

இதுபோன்று தினமும் வீணாகும் சக்தியை கருவியின் உதவியுடன் பயன்படுத்தினால், தமிழகத்தின் மின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும். விவசாயிகள் மற்றும் குடிநீர் தொட்டி குழாய்களிலிருந்து இந்தக் கருவியின் உதவியுடன் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை நேரடியாக மின் வாரியம் பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் மூலம் விவசாயிக்கும் கூடுதல் வருமானம் கிடைக்கும். ஒரு மெகா வாட் மின்சாரத்துக்கு ரூ. 3,150 விவசாயிக்கு கிடைக்கும்.

டர்பைன், ஜெனரேட்டர், ஸ்டெப்-அப் டிரான்ஸ்ஃபார்மர், அப்-லோட் மோட்டார் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தக் கருவி, சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சித் துறை உதவியுடன் மூன்று மாத காலத்தில் உருவாக்கப்பட்டது.

இந்தக் கருவிக்கு இந்திய காப்புரிமை (ஐ.பி.ஆர்.) பெறப்பட்டுள்ளது. ஓராண்டு முடிந்ததும் சர்வதேச காப்புரிமை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இன்னும் ஒரு மாத காலத்தில் இந்தக் கருவி வர்த்தக ரீதியில் கொண்டுவரப்படும். இதன் விலை ரூ. 1.25 லட்சம் என்றார்.

மேலும் 10 சதவீத மின்சாரத்தைப் பயன்படுத்தி 100 சதவீத மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் காந்தப் புலன்கள் மூலம் தானாக சுழலக்கூடிய இயந்திர மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்கும் முயற்சியையும் மேற்கொண்டு வருகிறோம் என்றும் நீதிச்சாமி கூறினார்.

**வயல்களில் எலி ஒழிப்பு நடவடிக்கை 2 வாரங்களுக்குள் தொடங்கும்: வேளாண் அதிகாரி**

First Published : 07 May 2011 09:15:05 AM IST

காரைக்கால், மே 6: காரைக்காலில் அடுத்த 2 வாரங்களுக்குள் வயல்களில் எலி ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

குறுவை சாகுபடிக்கான பணிகளை விவசாயிகள் ஆங்காங்கே தொடங்கிவிட்ட நிலையில், போதுமான உரம் வேளாண் துறையால் தரப்படவில்லையெனவும், எலி ஒழிப்பு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் புகார் கூறப்பட்டது.

இதுகுறித்து புதுவை அரசின் கூடுதல் வேளாண் இயக்குநர் மதியழகன் வெள்ளிக்கிழமை கூறியது:

காரைக்காலில் குறுவை சாகுபடி இலக்கு ஆயிரம் ஹெக்டேர். இதையும் கடந்து விவசாயிகள் சாகுபடி செய்வதற்கான வாய்ப்புகளும் உள்ளது. காரைக்கால் விவசாயிகள் அடியுரமாக அதிகமாக கோருவது டிஏபி. இது தூத்துக்குடி நிறுவனத்திலிருந்து தேவையான அளவு கிடைப்பதில் குறைபாடு நிலவுவதால் வேளாண் துறையின் பாசிக் நிறுவனம் இதற்காக ரூ. 5 லட்சத்தை முன்தொகையாக செலுத்திவிட்டு, டிஏபி அனுப்பிவைக்க வலியுறுத்தி வருகிறது. இதற்கு நிகரான காம்ப்ளக்ஸ் உரம் தயார் நிலையில் உள்ளது.

யூரியா 213 டன் உள்ளது. பொட்டாஷ் சுமார் 100 டன் பாசிக் நிறுவனத்திற்கு விரைவில் வரவுள்ளது. குறுவைக்குத் தேவைப்படும் தரமான விதைகள் பாசிக் நிறுவனத்திடம் தயார் நிலையில் உள்ளன. விவசாயிகள் இதனை பயன்படுத்திக்கொள்ளலாம்.

வயல் எலி ஒழிப்பு முகாம் நடத்தப்பட்டு வந்தபோது, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு திருமலைராயன்பட்டினம் பகுதியில் வயலில் வைக்கப்பட்ட எலி ஒழிப்பு மருந்தை தின்று ஆடு, மாடுகள் பல இறந்துவிட்டன. புதுவை அரசு இதற்காக நிவாரணம் தந்த நிலையெல்லாம் ஏற்பட்டது. இதனால் கடந்த சில ஆண்டுகளாக எலி ஒழிப்பு முகாம் நடத்தப்படவில்லை.

**முட்டைக்கோஸ் கிலோ 30 பைசா**

First Published : 07 May 2011 10:03:34 AM IST

ஒசூர், மே 6: உற்பத்தி அதிகரித்திருப்பதால் முட்டைக்கோஸ் விலை கடுமையாகச் சரிந்துள்ளது. ஒரு கிலோ 30 பைசாவுக்கு விற்பதால் விவசாயிகளுக்கு கடும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

÷ஒசூர், பேரிகை, பாகலூர், சூளகிரி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை, தளி உள்ளிட்ட ஒசூர் கோட்டத்தின் 42 கிராமங்களில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் முட்டைக்கோஸ் பயிரிடப்பட்டுள்ளது.

÷ஒரு ஏக்கர் பரப்பில் தலா 50 கிலோ எடை கொண்ட 80 முதல் 100 மூட்டைகள் வரை முட்டைக்கோஸ் அறுவடை செய்யப்படுகிறது. இதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வரை செலவிடும் விவசாயிகள், ரூ.30 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை லாபம் ஈட்டி வந்தனர்.

÷ஒசூரில் உள்ள 2 உழவர் சந்தைகள் மற்றும் பத்தளப்பள்ளி மொத்த காய்கறி விற்பனை அங்காடி மூலமாக விற்பனை நடந்து வருகிறது.

÷இந்நிலையில் உற்பத்தி அதிகரித்துள்ளதால் முட்டைக்கோஸ் விலை கடுமையாகச் சரிந்துள்ளது. ஒரு கிலோ 30 பைசா முதல் 50 பைசா வரையே விற்பனை செய்யப்படுகிறது.

÷கடும் இழப்பைச் சந்தித்துள்ளதால் முட்டைக்கோஸ் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

**விலைபோகாத உதிர்ந்த மாங்காய்கள்: விரக்தியில் விவசாயிகள்**

First Published : 07 May 2011 10:04:01 AM IST

போச்சம்பள்ளி, மே 6: காற்றுக்கு உதிர்ந்த மாங்காய்கள் குறைந்த விலைக்கு விற்பனையாவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

÷கிருஷ்ணகிரி மாவட்டத்தில், போச்சம்பள்ளி, ஜெகதேவி, மத்தூர், சந்தூர், வேலம்பட்டி, பையூர், பாரூர், அரசம்பட்டி, சாமல்பட்டி ஆகிய பகுதிகளில் அதிகளவில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

÷கடந்த சில நாள்களாக பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருதால் மேற்கண்ட இடங்களில் கடந்த 2 நாளில் மட்டும் 20 டன்னுக்கும் அதிகமான மாங்காய்கள் உதிர்ந்தன. இவற்றில் பெங்களூரா, கிளிமூக்கு, நீலம், செந்தூரா ரக மாங்காய்களே அதிகளவில் உதிர்ந்துள்ளன.

÷இவற்றை விற்பனைக்காக கொண்டு செல்லும் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் குறைந்த விலைக்கே கொள்முதல் செய்கின்றனர். கிலோ ரூ. 1.50 முதல் ரூ. 2 வரை விலை நிர்ணயம் செய்து எடுத்துச் செல்கின்றனர்.

÷மழைக்கு உதிர்ந்த மாங்காய்கள் சரியான காய்ப்பு இல்லாமலும், மாம்பழத்துக்கு உகந்தவையாகவும் இருக்காது எனக் கூறி இந்த அடிமாட்டு விலைக்கு கொண்டு செல்லுகின்றனர்.

÷மேலும், கிராமம், கிராமாக வியாபாரிகளே டிராக்டர், டெம்போ, மினி லாரி போன்ற லாரி போன்ற வாகனங்களை எடுத்து வந்து கொள்முதல் செய்வதால் விவசாயிகளும் போக்குவரத்துச் செலவு மிச்சம் எனக்கருதி கிடைத்த விலைக்கு மாங்காய்களை விற்று வருகின்றனர். அந்த விலைக்கும் விற்பனையாகாத மாங்காய்களை அப்படியே குவியல், குவியலாக விவசாயிகள் தேக்கி வைத்துள்ளனர்.

÷மழை ஒரு புறம் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும் மாங்காய்கள் உதிர்ந்து விலை குறைந்திருப்பது வருத்தத்தை அளித்துள்ளது.

தினமலர்

**நெல் கொள்முதல் துவக்கம்**

பதிவு செய்த நாள் : மே 07,2011,21:53 IST

வாலாஜாபாத் : தென்னேரிஅகரம் கிராமத்தில், அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் துவக்கப்பட்டுள்ளது. வாலாஜாபாத்திலிருந்து ஒன்பது கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது தென்னேரி அகரம் கிராமம். இக்கிராமத்தின் ஊராட்சி கட்டடத்தில், அரசு நெல் கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. இங்கு, கடந்த 5ம் தேதியிலிருந்து நெல் கொள்முதல் துவக்கப்பட்டுள்ளது. திருவாங்கரணை, கோவ ளவேடு, நாட்டான்குளம், குண்ணம், ஓடந்தாங்கல், சின்னிவாக்கம், சிறுவேடல், கட்டவாக்கம் வாரணவாசி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள்,

தங்கள் நிலங்களில் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்து வருகின்றனர். ஒரு குவிண்டால் சன்னரக நெல் 1,100 ரூபாய், குண்டு ரகம் 1,050 ரூபாய் என கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள் ளனர்.

**இருபது மூட்டைகள் வெல்லம் பறிமுதல்**

பதிவு செய்த நாள் : மே 07,2011,01:11 IST

சங்கராபுரம் : சாராயம் காய்ச்சுவதற்காக கடத்திய 20 மூட்டை வெல்லத்தை போலீசார் கைப்பற்றினர். மூங்கில்துறைப்பட்டு வழியாக கல்வராயன்மலைக்கு வெல்லம் கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. சப் இன்ஸ்பெக்டர் சுஜாதா மூங்கில்துறைப்பட்டு ஆற்றுப்பாலத்தில் நேற்று முன்தினம் மாலை திடீர் வாகன சோதனை மேற்கொண்டார். அப்போது திருவண்ணாமலையிலிருந்து வந்த மினிடார் வாகனத்தை போலீசார் நிறுத்தி சோதனை செய்தனர். அதில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 20 மூட்டைகள் வெல்லம், கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனத்தையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

**தேங்காய் பருப்பு உற்பத்தி குறைவு**

பதிவு செய்த நாள் : மே 07,2011,00:13 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டார பகுதிகளில் பெய்து வரும் மழையால் தேங்காய் பருப்பு உற்பத்தி படிப்படியாக குறைந்து வருகிறது. வரத்து குறைவால் கிலோவுக்கு இரண்டு ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. கன்னியாகுமரி கடல் பகுதியில் 22ம் தேதி வளிமண்டல சுழற்சி ஏற்பட்டது. தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் கோபி வட்டாரத்தில் ஒரு வாரத்தில் மட்டும் 300 மி.மீ., மழை கொட்டித் தீர்த்தது. மேலும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவி வருவதால், தேங்காய் பருப்பை முழுமையாக காய வைக்க முடியாமல், விவசாயிகள் திணறி வருகின்றனர். கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு ஏலத்துக்கு வரும் தேங்காய் பருப்பு மூட்டைகள் குறைந்து வருகிறது. ஏப்ரல் 13ம் தேதி 255 தேங்காய் பருப்பு மூட்டைகளும், 20ம் தேதி 243 மூட்டைகளும், 27ம் தேதி 175 மூட்டைகளும் விற்பனைக்கு வந்தன. தொடர் மழை காரணமாக நடப்பு வாரம் 150 மூட்டைகளே ஏலத்துக்கு வந்தன. அதிகபட்சமாக கிலோ 67.57 ரூபாய், குறைந்தபட்சமாக 62.79 ரூபாய், சராசரியாக 66.56 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரத்தை விட கிலோவுக்கு 2.16 ரூபாய் விலை அதிகரித்தது. நடப்பு வாரம் நான்கு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**புலிகள் பாதுகாப்பு பயிற்சி பரம்பிக்குளத்தில் துவக்கம்**

பதிவு செய்த நாள் : மே 07,2011,22:49 IST

பொள்ளாச்சி : பரம்பிக்குளம் புலிகள் சரணாலயத்தில் புலிகள் பாதுகாப்பு மற்றும் வன உயிரின பாதுகாப்பு, இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் குறித்த மூன்று நாள் பயிற்சி முகாம் துவங்கியுள்ளது. பெங்களூரை தலைமையிடமாக கொண்டு வனஉயிரின பாதுகாப்பு மையம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் நாட்டில் உள்ள வனங்களில் வாழும் உயிரினங்களின் பாதுகாப்பு, அவற்றிற்கான இயற்கை சூழ்நிலையை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் பொதுமக்களுக்கும், இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.இந்நிலையில், வனவிலங்குகள், இயற்கை மற்றும் சுற்றுச்சூழல், புலிகள் மேம்பாடு என்ற தலைப்பில் மூன்று நாட்களுக்கு பயிற்சி முகாம் நடக்கிறது. கேரளா மாநிலம் பரம்பிக்குளம் புலிகள் சரணாலயத்தில் நடக்கும் இந்த முகாமில், ஊடக பிரதிநிதிகளுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும் பல்வேறு தகவல்கள் வழங்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் துவங்கியுள்ள முகாமில், பரம்பிக்குளம் மற்றும் ஆனைமலை நில அமைப்பு, புலிகள் மேம்பாடு, சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்து பரம்பிக்குளம் புலிகள் சரணாலய வன உயிரின காப்பாளர் விஜயானந்தன், புலிகள் பாதுகாப்பில் ஊடகங்களின் பங்கு குறித்து பி.எஸ்.ஜி., கலை அறிவியல் கல்லூரி விரிவுரையாளரும், பயிற்சி முகாம் ஒருங்கிணைப்பாளரு மான ஜெயப்பிரகாஷ் ஆகியோர் பேசினர்.

**இயற்கை உரத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை 70 சதவீதம் உயர்வு**

பதிவு செய்த நாள் : மே 07,2011,00:43 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில் மல்பெரி செடிகள் பயிரிடும் விவசாயிகளில், இயற்கை உரத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 70 சதவீதம் உயர்ந்துள்ளது.பொள்ளாச்சி பட்டு வளர்ச்சி துறையினர் கூறியதாவது:சேலம், திருச்சி போன்ற ஊர்களில் இயற்கை உரங்கள் பயன்படுத்தாததால் நிலத்தின் தன்மை மாறியுள்ளது. ஆனால், பொள்ளாச்சி இயற்கை மண் வளம் அதிகம் கொண்டது. ஆனால், பலர் இந்த மண்ணின் வளத்தை கெடுக்கும் வகையில் செயற்கை ரசாயன உரங்களை பயன்படுத்துகின்றனர். இவை உடனடியாக அதிக விளைச்சல் தந்தாலும், மண்ணின் தன்மையை மாற்றி விடும். இதில் உள்ள ரசாயனங்கள் மண்ணின் வளத்தை கெடுத்து அதன் தன்மை கெட்டுப்போக செய்கிறது. பட்டு வளர்ச்சி துறை சார்பில் உரங்களின் தன்மை, ரசாயன உரங்களின் ஆபத்துகள் போன்றவற்றை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து முழுமையாக இயற்கை உரங்கள் பயன்படுத்த வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.100 முட்டை தொகுதிக்கு (45 ஆயிரம் பட்டுப்புழுக்கள்) இரண்டாயிரத்து 500 கிலோ வரை உணவு

தேவைப்படுகிறது. ஆனால், பட்டுப்புழுக்களுக்கு கொடுக்கும் மல்பெரி செடிகளின் இலைகள் உணவுக்கு பின் 50 சதவீதம் வீணாகிறது. இதை விவசாயிகள் தீ வைத்து அழித்து வந்தனர்.ஆனால், தற்போது விழிப்புணர்வு காரணமாக இயற்கையான உரங்களின் தன்மை அறிந்து அதனை பயன்படுத்த துவங்கியுள்ளனர்.விவசாய நிலங்களில் வீணாகும் மக்கும் குப்பை, மல்பெரி இலைகள் போன்றவற்றை குழியில் போட்டு அடைத்து காற்று புகும் அளவிற்கு இடம் ஒதுக்கி வந்தால் மூன்று மாதங்களுக்குள் அது இயற்கை உரமாக மாறிவிடும்.பின் நிலங்களுக்கு அதனை பயன்படுத்தலாம். இயற்கை உரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் போது மட்டும் செயற்கை உரங்களை பயன்படுத்தலாம். இதனால், இயற்கை உரம் பயன்படுத்தும் விவசாயிகளின் எண்ணிக்கை 70 சதவீதம் உயர்ந்துள்ளது என்றனர்.

**நிலக்கடலை ஊடுபயிர் செய்ய வேளாண் பல்கலை அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 07,2011,00:22 IST

கோவை : ""கரும்பு பயிர்களிடையே நிலக்கடலை ஊடுபயிர் செய்வதால் நல்ல மகசூல் கிடைக்கும்," என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.வேளாண் பல்கலையில் எண்ணெய் வித்துக்கள், தாவர எரிபொருள் குறித்த இரண்டு நாள் ஆராய்ச்சி பயிலரங்கு நடந்தது. பயிலரங்கு துவக்க விழாவில், பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசியதாவது: சர்வதேச அளவில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில், இந்தியா 4வது இடத்தில் உள்ளது. எண்ணெய் பொருட்களை பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் நிலக்கடலை மகசூல் அதிகப்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

தமிழகத்தில் நிலக்கடலை உற்பத்தி திறன், எக்டேருக்கு 1,989 கிலோ ஆக உள்ளது. உழவு, விதைத்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் உள்ளிட்டவைக்கு இயந்திரங்களை பயன்படுத்தினால் அதிக மகசூல் கிடைக்கும். செயல்விளக்க திடல்கள் மூலம் விவசாயிகளுக்கு இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கரும்பு பயிர்களிடையே நிலக்கடலை ஊடுபயிர் செய்வதால் நல்ல மகசூல் கிடைக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். திசு வளர்ப்பு முறையால் பயிர் சாகுபடி செய்ய உயிர் தொழில்நுட்ப முறையிலும், உர நீர்பாசன முறையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவும், உயிரி திரவ எரிபொருள் உற்பத்தியில் காட்டாமணக்கு தவிர புங்கத்தை மாற்றாக பயன்படுத்துதல் குறித்தும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார். பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா உள்பட பலர் பங்கேற்றனர்.

**தரமான விதைகள் வாங்க விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 07,2011,23:04 IST

பொங்கலூர் : விதை மற்றும் காய்கறி நாற்றுகளை வாங்கும்போது உரிமம் பெற்ற விதை விற்பனை நிறுவனத்திடம் மட்டுமே வாங்க வேண்டும் என, கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் தெரிவித்துள்ளார்.
அவரது அறிக்கை: விதை மற்றும் காய்கறி நாற்றுகளை வாங்கும்போது விவசாயிகள் உரிமம் பெற்ற விதை விற்பனை நிறுவனத்திடம் இருந்து மட்டுமே வாங்க வேண்டும்; இவ்வாறு உரிமம் பெற்ற நிலையில் விதை ஆய்வாளர்களால், முறைப்படி ஆய்வு செய்யப் பட்டு, ஒவ்வொரு விதை குவியலிலும் விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இதனால் அவற்றின் தரம் மற்றும் முளைப்பு திறன் உறுதி செய்யப்படுகிறது.

எனவே அனைத்து விவசாயிகளும் விதை உரிமம் பெற்ற நிறுவனங்களிலும், நாற்றுப் பண்ணைகளிலும் விதை மற்றும் நாற்றுகள் வாங்க வேண்டும்.விதைகளின் விவர அட்டையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை சரிபார்த்து, வாங்க வேண்டும்; காலாவதி விதைகளை வாங்க கூடாது. விற்பனை பட்டியலில் பயிர், ரகம், குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வாறு விதைகளை வாங்கும் போது, விற்பனையாளர் முழு முகவரி மற்றும் வாங்குபவரின் கையொப்பமிட்டு வாங்க வேண்டும்; விற்பனை பட்டி யலை, பயிரின் அறுவடை காலம் வரை விவசாயிகள் வைத்திருக்க வேண்டும்என, தெரிவித்துள்ளார்.

**கொள்முதல் விலை குறைவு இருப்பு வைத்து விற்பனை**

பதிவு செய்த நாள் : மே 07,2011,23:01 IST

உடுமலை : சின்ன வெங்காயத்தின் கொள்முதல் விலை குறைந்துள்ளதால் இருப்பு வைத்து விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். உடுமலை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில், சின்னவெங்காயம் அதிகளவு பயிரிடப்படுகிறது. ஜன., மாதத்தில் பயிரிடப்பட்ட சின்ன வெங்காய சாகுபடியில், ஆட்கள் பற்றாக்குறை உட்பட காரணங்களால், அறுவடைப் பணி தாமதமாக நடந்து வருகிறது. தற்போது, சின்ன வெங்காயத்தின் கொள்முதல் விலை குறைந்துள்ளதால், விவசாயிகள் இருப்பு வைக்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது, விவசாயிகளிடமிருந்து, முதல் ரகம் 15 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. சீசன் துவக்கத்தில், கிலோ 22 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், உள்ளூர் வரத்து அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி குறைந்தது உட்பட காரணங்களால் விலை குறைந்துள்ளது. இதனால், விளை நிலங்களிலேயே சின்னவெங்காயத்தை தரம் பிரித்து இருப்பு வைத்து வருகின்றனர்.

விவசாயிகள் கூறுகையில், "சின்னவெங்காய சாகுபடியில், இடுபொருட்கள் விலை உயர்வு, தொழிலாளர்கள் கூலி அதிகரிப்பு உட்பட காரணங்களால், சாகுபடி செலவு, ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது. கொள்முதல் விலை குறைந்ததால், ஏக்கருக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படும். சாகுபடிக்கு வீரிய ரக விதைகள் பயன்படுத்தப்படுவதால், குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் இருப்பு வைக்க முடியாது. விரைவில் ஏற்றுமதி அதிகரித்து விலை கூடும் என்ற எதிர்பார்ப்பில், தரம் பிரித்து இருப்பு வைத்து வருகிறோம்' என்றனர்.

**தரத்தை நிலை நிறுத்தும் சீரான கவாத்து பணி:தேயிலை வாரிய அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 07,2011,00:00 IST

குன்னூர் : ""தேயிலை தோட்டத்தை சீரான இடைவெளியில் கவாத்து செய்வதன் மூலம் தரத்தை நிலைநிறுத்தி கொள்ள முடியும்," என தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறினார். தேயிலை வாரியம், உபாசி வேளாண் அறிவியல் நிலையம் இணைந்து மேல் கவட்டி கிராமத்தில் தேயிலை கவாத்து செயல்முறை விளக்க விழா நடத்தின. சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன், லட்சுமி நாராயணா சிறு விவசாயிகள் சங்கத்தை திறந்து வைத்து, இலைப்பை, தராசு, வாகனம் வாங்க மானியம் பெற உத்தரவு சான்றிதழ் வழங்கினார்.

வேலையில்லா தேயிலை தோட்ட தொழிலாளர்கள் 7 பேருக்கு கவாத்து இயந்திரம் 50 சதவீத மானியத்தில் வழங்கி அவர் பேசுகையில், ""கவாத்து செய்யப்படாத தேயிலை தோட்டத்தில் இருந்து பெறப்படும் கொழுந்துகளில் இருந்து தயாரிக்கப்படும் தேயிலையின் தரம் சற்றே குறைவதால், விலையும் குறைவாக கிடைக்கிறது. சிறு விவசாயிகள் தங்கள் தோட்டத்தை 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை கவாத்து செய்து தரத்தை உயர்த்த வேண்டும்; அதன் மூலம் உற்பத்தி செய்யும் பசுந்தேயிலையின் விலையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கவாத்துப் பணியில் ஈடுபடும் இளைஞர்களை, சிறு விவசாயிகள் பயன்படுத்தி தங்கள் தோட்டங்களை கவாத்து செய்து கொள்ள வேண்டும். இயந்திரம் மூலம் கவாத்து செய்தால் விரைவில் அதிக பரப்பு கவாத்து செய்ய முடியும்," என்றார். உபாசி வேளாண் அறிவியல் தொழில்நுட்ப வல்லுனர் ராமமூர்த்தி பேசினார்.

விக்னேஸ்வர் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர் ரமேஷ் பேசுகையில், ""கவாத்து தோட்டத்திலிருந்து பெறப்படும் பசுந்தேயிலையை கொண்டு தயாரிக்கப்படும் தேயிலை தரம் உயர்ந்துள்ளதால் சந்தையில் நல்ல விலைக்கு விற்கப்பட்டு, பசுந்தேயிலைக்கு அதிக விலை வழங்க முடிகிறது," என்றார். பாராமவுண்ட் தொழிற்சாலை பொது மேலாளர் நீலவர்ணன் பேசுகையில், ""நீலகிரி தேயிலைக்கு உரித்தான தரத்தை அனைவரும் ஒன்றுபட்டு நிலை நிறுத்த வேண்டும்," என்றார்.

**அதிக லாபம் தரும் விதைப்பண்ணை**

பதிவு செய்த நாள் : மே 07,2011,23:42 IST

வடமதுரை : வடமதுரை வட்டாரத்தில் நெல், சிறுதானியம், பயிறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்களுக்கு விதைப்பண்ணை அமைத்து விவசாய விரிவாக்க மையம் மூலம் வினியோகம் செய்யப்படுகிறது.
இந்தாண்டிற்கு விதைப்பண்ணை அமைக்க விவசாயிகள் தெரிவு செய்யும் பணி நடந்து வருகிறது. விதைப்பண்ணை அமைப்பதன் மூலம் கொள்முதல் செய்யப்படும் விதைகளுக்கு உள்ளூர் சந்தை விலையுடன் ஒரு கிலோ நெல் விதைக்கு ரூ. இரண்டும், சிறுதானிய விதைக்கு ரூ.இரண்டும், பயிறு வகை விதைகளுக்கு ரூ.25ம் கூடுதலாக அரசு மானியமாக வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் வடமதுரை உதவி விதை அலுவரை அணுகலாம் என உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**தக்காளி விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 06,2011,23:55 IST

ஓசூர்: தேன்கனிக்கோட்டை பகுதியில் சூறாவளி காற்றால் சேதமடைந்ததால் ஒரு ரூபாய்க்கு விற்ற தக்காளி நேற்று முன்தினம் 10 ரூபாய்க்கு விலை உயர்ந்தது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் தமிழகத்தில் அதிகளவு தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. ஓசூர், ராயக்கோட்டை, உத்தனப்பள்ளி, சூளகிரி, பாகலூர், பேரிகை, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் பகுதியில்

ஆண்டு முழுவதும் விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த சில மாதமாக உற்பத்தி அதிகரிப்பால் தக்காளி விலை கடும் வீழ்ச்சியடைந்தது.
ஒரு கிலோ தக்காளி 50 பைசா முதல் ஒரு ரூபாய் வரை விற்பனையானது.

இதனால், விவசாயிகள் கவலையடைந்தனர். நேற்று முன்தினம் திடீரென்று ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் கடும் சூறாவளி காற்றுடன் கன மழை பெய்தது. இதில், தக்காளி செடிகள் காற்றில் நொடிந்தும், பழங்கள் கீழே விழுந்தும் நாசமடைந்தன. உள்ளூர், வெளியூர் சந்தைகளுக்கு தக்காளி வரத்து அடியோடு குறைந்தது.

வரத்து குறைவால் நேற்று முதல் உழவர்சந்தைகள், சில்லறை காய்கறி கடைகளில் தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்தது. ஒரு கிலோ தக்காளி 10 ரூபாய் முதல் 13 ரூபாய் விற்பனையானது. இதனால், விவசாயிகள் சேதமடைந்த தக்காளிகளையும் பறித்து சந்தைகளுக்கு கொண்டு வந்தனர். தற்போது ஏற்பட்டுள்ள விலை உயர்வை பயன்படுத்தி மீதமுள்ள தக்காளி செடிகளை பராமரித்து நஷ்டத்தை சமாளிக்க விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.